DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 93 /2023

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : பன்னீர்செல்வம் | Father's/Husband's Name : | நாகப்பகவுண்டர் |
| Village | : புள்ளிமான்கோம்பை | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.02.2026

**3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1) பிரதிவாதி வாதியாக இருந்து என் மீது தேனி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.575/2023 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கில் தாவா சொத்து அவருக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக்கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி இராஜேந்திரன் 2023ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி 1ம்பிரதிவாதியின் வாரிசுகளை வழக்கில் சேர்க்க கோரி இடைநிலை மனு எண்.1/2024 தாக்கல் செய்து அதை நாங்கள் வாபஸ் பெற்றுக்கொண்டதால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். நானும் 1ம் பிரதிவாதியும்வாதிகளாக இருந்து ஒரே வழக்கறிஞர் மூலம் அசல் வழக்கு எண்.35/2017 என்ற வழக்கை நடத்தி வந்தோம் என்றால் சரிதான்.

2) அந்த தீர்ப்புக்கு எதிராக பாண்டியன் என்பவர் தேனி சார்பு நீதிமன்றத்தில் A.S.No.26/2025 என்ற மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். எனது வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி வழக்கு விபரங்களை சொல்லவில்லை என்றால் சமீபத்தில் தான் அவருடைய மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது. அசல் வழக்கு எண்.35/2017 வழக்கில் இராஜேந்திரன் கடந்த 20.02.2024ம் தேதி இறந்த விபரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் அவருடைய வாரிசுகளை வேண்டுமென்றே சேர்க்காமல் அந்த வழக்கை நடத்தி தீர்ப்புபெற்றிருக்கிறோம் என்றால் சரியல்ல. அந்த வழக்கு விபரங்களை இராஜேந்திரனின் வாரிசுகளுக்கு தெரியப்படுத்தவில்லை என்று சொன்னால் அந்த வழக்கை நான் தான் நடத்தினேன், அதனால் சொல்லவில்லை. நான்

வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் தான் வழக்கு விபரங்களை சொல்லவில்லை என்றால் சரியல்ல.

3) வழக்கில் 1 நபர் இறந்துவிட்டால் அவரது வாரிசுகளை சேர்க்க வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்று கேட்டால் தெரியும். இந்த வழக்கில் விளம்புகை பரிகாரம் கோராமல் நிலையுறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டும் கோரி தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உண்மை விபரங்களை மறைத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அனுபவத்தில் இருப்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 18.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN Digitally signed by E SUGANTHAN Date: 2026.02.18 15:23:13 +0530

District Munsif,
Aundipatti.